# எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான்

அன்பர்களே!இப்பகுதியில் டாக்டர்.மரியா மாண்டிசொரியின் குழந்தைகள் பற்றிய ஆய்வுகள்,அவர்களின் வெவ்வேறு மனநிலைகள்,ஒரு குடும்பத்தில் அவர்களின் நிலை,பெற்றோர்---ஆசிரியர்களின் பங்கு எனப் பல விஷயங்கள் பேசப்பட உள்ளன.ஒவ்வொரு விஷயமும் உங்களின் விமர்சனத்திற்கு உரியதே.நீங்கள் உங்கள் பிள்ளைகளையே உதாரணமாக எடுத்துக் கொண்டு இப்பகுதியைப் படித்து உணரலாம்.மாண்டிசொரியின் சில முக்கிய புத்தகங்கள் கூறும் கருத்துக்களை வைத்து இப்பகுதி அமைகின்றது.

**யார் இந்த குழந்தை?**

நம் பிள்ளை யார்?அவன் இறைவனின் உன்னத படைப்பு.சாதாரணமானவன் இல்லை.ஒவ்வொரு தாயும் கருவுற்ற நாள் முதல் பிள்ளையை எண்ணத்தால்,பேச்சால்,உணவால், வளர்க்க வேண்டும்.அக்குழந்தைக்கு அம்மாவின் கருவறையே முதல் பள்ளிக் கூடம்.அம்மாவே முழுமுதல் ஆசிரியர்.கர்ப்ப காலத்தில் அம்மாவின் செயல்களும்,பேச்சும்,உணர்வுமே பிள்ளைக்கு முதல் பாடங்கள்.இக்குழந்தையை ‘‘ தெய்வீக சிசு’’ என்பார் மாண்டிசொரி.குழந்தையும் தெய்வமும் ஒன்றல்லவா?நாம் தரும் உருவத்தைத் தானே தெய்வம் ஏற்கிறது?அதைப் போல் அம்மாவின் முழுமையான வெளிப்பாடே இக்குழந்தை.

உதாரணம்: என் தாய் நான்,நானாகவே பாடல்கள் எழுதிப் பாட வேண்டும் என்று நான் கருவில் இருக்கும் காலத்தில் அடிக்கடி எனக்கு சொல்வாராம்.அதன்விளைவாக எனக்கு இருபத்திஐந்து வயதில் பாடல்கள் எழுதி இசையமைக்கும் திறன் வந்தது.அதனால் தான் நம் அம்மா கண்கண்ட கடவுள் ஆகிறாள்.

**அவதாரப் புருஷர்கள்:**

இப்போது எண்ணிப்பாருங்கள்.ராமன்,கண்ணன்,சங்கரர்,காந்தி ஆகியோரின் கர்ப்பவாசம் எவ்வளவு திட்டமிட்டபடி இருந்திருக்கும் என்று.

மாண்டிசொரி ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு ‘‘அவதார புருஷனாகவே’’ பார்க்கிறார்.அதனால் தான் பள்ளிகளில் குழந்தைகள் வீண் செல்லம் தரப்படாமல் மரியாதையுடன் நடத்தப் படுவதைப் பார்க்கலாம்.அவதாரப்புருஷர்களான நம் பிள்ளைகளுக்கு மிகவும் தேவை நம் கட்டுப்பாடற்ற செல்லம் இல்லை.தூய அன்பும் அருகாமையும் அரவணைப்பும் தான்.அதைவிட முக்கியம் உயர்ந்த வாழ்க்கைப் பண்புகள்.

உதாரணம்:பிள்ளையைக் கொஞ்சும் பலர் ‘‘பாட்டியை அடி,தாத்தாவை எங்கே காலால் உதை...’’ என்று உச்ச வரம்பில் அன்பால் பேசுவர்.பெரியவர்களும் அதை ரசிப்பர்.இது மிகவும் தவறு.பின்னால் பத்துவயதில் இச்செயலை அப்பிள்ளை பாட்டிக்குச் செய்யும் போது அது மாமியார் மருமகள் சண்டையில் முடிவது உறுதி.பழையத் தாலாட்டுப் பாடல்களில் பல உறவுகளின் பெருமைகளைப் பற்றிப் பாடிப் பிள்ளைக்கு வாழ்வின் பண்புகளை ஊட்டுவாள் அக்கால அம்மா.

எனவே பிறந்த சிசுவை அன்பால் அரவணையுங்கள்.,ஆனால் தவறான செல்லத்தால் கெடுக்காதீர்கள்.

**பிறந்த குழந்தைக்குத் தேவை---உடல்+ஆன்மாவின் அ**ன்பு:

நமக்கு வேலையில் வேறு ஊருக்கு மாற்றல் ஆகிறது.அப்பப்பா எத்தனை புலம்பல்கள் புலம்புகிறோம்?காரணம் திடீரென்று நம்மால் பழகிய இடத்தில் இருந்து மாற மனம் ஏற்பதில்லை.ஆனால் போகப்போகப் புதிய ஊர் பழகிவிடுகிறது அல்லவா?

அதைப் போலத்தான் பிறந்த பிள்ளைக்கு எல்லாமே புதியதாகத் தெரியும்.இருட்டான பத்திரமான கர்ப்பப்பையின் சூழலில் இருந்து அழகான பஞ்சுமெத்தையும் அம்மாவின்

அப்பாவின் உறவுகளின் உடல் ஸ்பரிசமும்,அறையின் அமைப்பும்,வெளிச்சமும்,பேச்சுகளும் பிள்ளைக்குப் புதியது.அதை உணர்த்தவே அது அழுகிறது.
ஒவ்வொருநாளும் அது வளர வளர,புதிய சூழல் பழக்கம் ஆகிறது.
இந்த விஷயத்தை அப்படியே இரண்டரை வயதுப் பிள்ளைக்குப் பொருத்திப் பாருங்கள்.இப்போது பல விஷயங்கள் உங்களுக்கே புரியும்.ஏன் அப்பிள்ளை எதற்கெடுத்தாலும் அடம்பிடித்து அழுது ஆர்பாட்டம் செய்கிறது என்று.ஒவ்வொரு புதிய உலகானுபவம் வரும் போதும் மனிதன் முதலிலதை ஏற்க மறுக்கிறான்,பின் பழகப்பழக ஏற்கிறான்.,மேலும் விரும்புகிறான்.

பெற்றோர்களே!உண்மையான அன்பு என்பது பிள்ளையின் உடம்பைப் பற்றியது மட்டுமே அல்ல.பிள்ளையின் மனமும் ஆன்மாவும் உங்கள் அன்பால் வளர்க்கப் பட வேண்டும் என்கிறார் மாண்டிசொரி அம்மையார்.